# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2050/36 - 2017 දෙසැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.12.21

*2050/36 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 21/ 78* (xv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், (2017, செத்தெம்பர் 21 ஆந் திகதிய 2037/17 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 1999 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 1093/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினை தாபிப்பது தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை, அட்டவணையின் நிரல்* I *இல் காணப்படும் "தொழில் கற்கைகள் மற்றும் நிதிப் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததான நிரல்* II *இல் காணப்படும் "காப்புறுதி மற்றும் மதிப்பீட்டுத்துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவினைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன் :-*

"ஆங்கில மொழி கற்பித்தல் துறை.".

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2017, திசெம்பர் 14.*

*01-178*